1981 மே 12]

மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் (திரு. வி. வி. சுவாமிநாதன்) : பேரவை முன்னுள்ள கேள்வி "தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு வன (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 38/1981.) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்"

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவு 2, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே,

'தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு வன (திருத்த) சட்ட முன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 38/1981) நிறைவேற்றப் பெறவேண்டும்.'

தீர்மானம் பேரவையின் முடிவிற்குப் விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப் பெற்றது.

9. அறிவிப்புகள்.

(அ) கைத்தறி தொழிலாளர்கள் (வேலை நிலைமைகளும் பல்வகை விதித்துறைகளும்) சட்டமுன்வடிவு, 1981 (ஆ. இ).

மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் (திரு. வி. வி. சுவாமிநாதன்) : பேரவைக்கு ஓர் அறிவிப்பு, 1981 ஆம் ஆண்டு தமிழ்நாடு கைத்தறித் தொழிலாளர்கள் (வேலை நிலைமைகளும் பல்வகை விதித்துறைகளும்) சட்டமுன்வடிவு சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 42/1981-ஐ பேரவையில் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

8. அரசினர் சட்ட முன்வடிவுகள் —(தொடர்ச்சி).

(ஈ) கைத்தறித் தொழிலாளர்கள் (வேலை நிலைமைகளும் பல்வகை விதித்துறைகளும்) சட்ட முன்வடிவு, 1981.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, "1981-ஆம் ஆண்டு தமிழ்நாடு கைத்தறித் தொழிலாளர்கள் (வேலை நிலைமைகளும் பல்வகை விதித் துறைகளும்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 42/1981) ஆய்வுக்கு *எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்."

என்று மொழிகிறேன்.

---

*1981ம் ஆண்டு மே மாதம் 5ம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.